வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 27 புதன்கிழமை (09 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 74

## பேச்சுக்கு முன் நிபந்தனையாகப் புலிகள் ஆயுதங்களைக் களையத் தேவையில்லை

### இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, பெப். 9

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒரு நிபந்தனையாக விடுதலைப்புலிகள் தங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கத் தேவையில்லை.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அதிமேற்றிராணியார் நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையிலான கத்தோலிக்கத் திருச்சபைத் தூதுக் குழுவைச் சந்தித்த போது இராணுவத் தளபதி இப்புதிய நிலைப்பாட்டைத் தெரிவித்தார் என்று 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவும் அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்று சிரேஷ்ட அரசு அதிகாரி ஒருவரிடம் தெரிவித்தார் என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (அ-எ)

## புலிகள் – அரசுக்கு இடையேயான முட்டுக்கட்டை நிலையில் திருப்பம்

### யுத்த நிறுத்தத்துக்கு மதகுருமார் வலியுறுத்து

கொழும்பு, பெப். 9

கொழும்பு பேராயர் அதிவண நிக்கலஸ் மார்க்ஸ் பெர்னாண்டோ தலைமையிலான மத குருமாரின் யாழ். விஜயம் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நீண்ட காலம் நிலவிவந்த முட்டுக்கட்டையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக மிக நம்பகமாகத் தெரியவருகிறது.

கொழும்பில் வெளியாகும் தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

அரசுடன் பேச்சு நடத்த வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தை மேசைக்கு வர விடுதலைப் புலிகள் கோடி காட்டியுள்ளதாகவும்—

பொருளாதாரத் தடையை நீக்கி, பூநகரிப் பாதையை போக்குவரத்துக்குத் திறந்து விட அரசாங்கம் முன்வருமிடத்து யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய விடுதலைப் புலிகள் தரப்பில் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்—

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாடு குறித்து பேராயர் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா முதலானோரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாகவும்—தெரியவந்துள்ளதாக அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லா பிரேரணை

# ஐ.தே.க. அரசுக்கு எதிராக!

## குற்றச்சாட்டுப் பட்டியலை முன்வைக்க எதிரணி முஸ்தீபு

கொழும்பு, பெப்ரவரி 9

பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை மீண்டும் கொண்டுவருவதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகள் கூட்டாக முயற்சித்து வருகின்றன.

நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த வாரத்தில் சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என எதிர்க்கட்சி கொறடாவான றிச்சர்ட் பத்திரான தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தொடர்பான அரசின் குழப்பமான கொள்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் அடங்கிய குற்றச்சாட்டுப் பட்டியல் ஒன்றையும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றச்சாட்டுப் பட்டியலில் இடம்பெறும் முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாத ஆட்சியாளர்கள் குழப்பமான கருத்துக்களை வெளியிட்டு மக்களைக் குழப்புகிறார்கள்.

அரசியல் தீர்வு காண்பதற்காக பிரதமர் ரணில் புலிகளை பேச்சுக்கு அழைக்கிறார். ஆனால் ஜனாதிபதி டி. பி. நாட்டில் இனப்பிரச்சினையே இல்லை; பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது என்கிறார்.

★ 'ஏர்பஸ்' கொள்வனவில் மோசடி செய்துள்ள அரசு அது குறித்து பொய்யான தகவல்களை நாடாளுமன்றத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



உவர் சகடைக்காரருக்கு சுடலை ஞானம் எல்லோ பிறந்திருக்குது ........!

## கனடா அழைப்பை தொண்டா பரிசீலனை

இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடத்த கனடா வருமாறு தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை பரிசீலனை செய்து வருவதாக அமைச்சரும் இ. தொ. கா, தலைவருமான திரு எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கனடாவில் வாழும் தமிழ் சமூகத்தின் முன்னணிப் பிரமுகர்களும், மதத் தலைவர்களும் அகதிகள் நலனில் அக்கறை கொண்ட கனடியர்களும்—

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தும் பூர்வாங்க பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறு தொண்டமானிடம் கோரிக்கை விடுத்தனர் என்பது தெரிந்ததே.

இலங்கை இனப்பிரச்சினைக்கு கனடிய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி, அரசியல் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அவ்வரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த கனடா வருமாறு தொண்டமானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன என்பது தெரிந்ததே. (ஒ)

## பொருள்கள் மீதான தடை: நீக்க ராணுவம் சிபார்சு?

கொழும்பு, பெப். 9

யுத்தத்துக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களைத் தவிர ஏனைய பொருள்களை வடக்கிற்கு எடுத்துச் செல்வதற்கான தடையை அகற்றும்படி இராணுவம் அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறது ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

### அமெரிக்காவில் திருட்டில் ஈடுபட்ட

## கொத்தலாவலையின் செயல் ராணுவ மன்றம் விசாரிக்கும்

அமெரிக்க இராணுவ அக்கடமியில் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஜயந்த கொத்தலாவலையின் நடத்தை குறித்து இராணுவ நீதிமன்றம் விசாரிக்கவுள்ளது.

இதற்கான உத்தரவை தளபதி ஜெரி டி சில்வா பிறப்பித்திருக்கிறார்.

அமெரிக்க இராணுவ அக்கடமி அனுப்பிய அறிக்கையை பரிசீலனை செய்த பின்னரே தளபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அமெரிக்காவில் கொத்தலாவலை தலைமறைவானது தெரிந்ததே. (உ-எ)

### பிரேமா கொலையை அடுத்து

## சேவா வனித இயக்கத்தின் நான்கு வாகனங்கள் மாயம்!

கொழும்பு, பெப். 9

சேவா வனித [மகளிர் சேவை] இயக்கத்தினால் கடந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டதும், தற்போது காணாமற் போய்விட்டதாகக் கூறப்படுவதுமான உல்லாச மினி பஸ் ஒன்றையும் மூன்று உல்லாசக் கார்களையும் தேடிக் கண்டு பிடிக்கும் பொறுப்பு இரசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு மே மாதம் முதல் இவ்வாகனங்கள் காணாமற் போய்விட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

இவ் வாகனங்கள் பொய்யான இலக்கத்தகடுகளுடன் பாவிக்கப்பட்டு வருவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. உல்லாச மினிபஸ் அம்பாந்தோட்டைக்கு அருகில் பயணிகளுடன் அடிக்கடி செல்வது தெரியவந்திருப்பதாக 'சண்டே ஒப்சேவர்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு மே மாதம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அடுத்த தாக்குதல் வடக்கு பெருநிலப் பரப்பில்!

### ஆங்கிலப் பத்திரிகை ஆருடம்

கொழும்பு, பெப். 9

விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் வடக்கு பெருநிலப் பரப்பில் தான் இடம் பெறக்கூடும்—

—சண்டே ஐலண்ட் வார இதழில் விசேட செய்தியாளர் ஒருவர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம், கோவில் முனை முகாம், வெலி ஓயாவில் உள்ள வேறு இராணுவ முகாம்கள் — இவற்றில் ஏதாவது ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்று விசேட செய்தியாளர் தமது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

## காய்ச்சல் நோய்கள் தீவிரமாகப் பரவுகின்றன

### நேற்று மட்டும் ஐவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 9

செப்ரிஸ்மியா, மலேரியா, சளிச்சுரம் (நிமோனியா) ஆகிய நோய்கள் கண்டவர்களில் நேற்று மட்டும் ஐவர் யாழ். போதனா வைத்திய சாலையில் மரணமடைந்தனர். அவர்களில் மூவர் குழந்தைகள்.

றெஜினோல்ட் சுபானி (2 வயது) குருநகர், வலோரி வின்சன் (74 வயது) குருநகர், சந்திரன் பெரிய சாமி [illegible]

### பதவிக் காலத்தின் இறுதியில் ஓய்வு பெறும் தளபதி முடிவு!

## வடக்கில் விமானத் தாக்குதல் சில வாரங்களுக்கு இல்லை!

### சிரேஷ்ட அதிகாரிகள் பெரும் அதிருப்தி

கொழும்பு, பெப். 9

விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா இன்னும் சில வாரங்களில் தளபதிப் பதவியில் இருந்து ஓய்வுபெறவிருக்கிறார் என்றும் —

அதற்கு முன்னர் விமானத் தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களின் கோபத்தை அவர் சம்பாதிக்க விரும்பவில்லை என்றும் —

அதன் காரணமாகவே கடந்த இரு வாரங்களாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்படவில்லை என்றும் ஊகிக்கப்படுவதாக ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

வட பகுதியில் எதிரியின் இலக்குகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்துவதில்லை என்ற விமானப் படைத் தளபதியின் முடிவு சிரேஷ்ட மற்றும் நடுத்தர அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகவும் —

தனிப்பட்ட காரணங்களுக்காக தேசியப் பாதுகாப்பை விட்டுக் கொடுப்பது எதிரிகள் தங்கள் பலத்தைத் திரட்ட உதவும். அது இந்தச் சந்தர்ப்பத்தில் தாங்கிக்கொள்ள முடியாத பாதகமான விளைவை ஏற்படுத்தும் என்றும் —

'சண்டே ஐலண்ட்' கருத்து வெளியிட்டிருக்கிறது.

### தேர்தல் முடிவுற்ற கையோடு

## வடக்கின் மீதான தாக்குதல் திட்டத்தில் மாற்றம் இல்லை

கொழும்பு, பெப் 9

கிழக்கு மற்றும் வவுனியா நகர சபை ஆகியவற்றிற்கான உள்ளூராட்சி தேர்தல் முடிவுற்ற கையோடு, வடக்கின் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படும்.

அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைத் திரட்டும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கடற்படைக்கு வள்ளங்களையும், விமானப்படைக்கு போர் விமானங்களையும் கொள்வனவு செய்வதிலும் பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தவிர்க்க முடியாதது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்புத் தமிழ் பத்திரிகை ஒன்றின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொண்டாவின் இடத்துக்கு செல்லச்சாமி அமைச்சராவார்?

கொழும்பு, பெப். 9

அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் பட்சத்தில் இ. தொ. கா. தலைவர் தொண்டமானை அமைச்சர் பதவியில் இருந்து விலக்கிவிட்டு அந்த இடத்துக்கு தற்போது ராஜாங்க அமைச்சராக உள்ள எம். எஸ். செல்லச்சாமி நியமிக்கப்படும் சாத்தியம் இன்னும் நிலவுகின்றது.

அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை —

இ தொ. காவில் தொண்டமான் — செல்லச்சாமி அணிகளுக்கு இடையேயான மோதலை சமரசமாகத் தீர்ப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் அமைச்சர் சிறிசேன கூரேயும் எடுத்த மத்தியஸ்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

இதற்கிணங்க, ராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் இ தொ. காவில் இருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர்களை தொண்டமானிடம் அழைத்துச் சென்று

(5 ஆம் பக்கம் பார்க்க)

### படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## ஜனாதிபதித் தேர்தலை டி.பி. நடத்தியே ஆகவேண்டும்!

### முறையை மாற்றும் அவரது முயற்சி பலிக்காது!!

கொழும்பு, பெப். 9

நடப்பு அரசியல் நிலைவரத்தின் படி —

இவ்வருட இறுதியில் — டிசம்பரில் — ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாது என்று ''சண்டே ஐலண்ட்'' கருத்து வெளியிட்டிருக்கிறது.

நாடாளுமன்ற மூலம் ஜனாதிபதி தெரிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறியிருப்பினும் —

அது தொடர்பான திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவது என்பது சாத்தியமற்ற காரியம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு 125 எம்.பிக்களே உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மலையகத்தில் இ.தொ.காவின் செல்வாக்கில் உள்ள சுமார் ஒருலட்சம் வாக்காளர்களின் ஆதரவைப் பெறாமல் வெற்றியீட்டுவது முக்கியமாகவே, நாடாளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாக வருவதற்கு விஜேதுங்கா முயல்கின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தில் தொண்டமானை ஓரங்கட்டும் முயற்சியே இது என்று கொழும்புப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன. (உ எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சோகேஸ், சாய்மனை கதிரை, பல்டம் கோழிகள், கூடுகள், பூமரங்கள், பூச்சாடிகள் உடன் விற்பனைக்குண்டு இல. 27, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பின்னால்) (29321)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் மத்திய சந்தைக்கு முன் ஒழுங்கையில் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள மூன்று (3) பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய். (29310)

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புக்களான பற்பொடி, நீலம், சியாக்காய் பவுடர், அச்சான் அல்வா மற்றும் இனிப்பு வகைகள் சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடிய ஆண்கள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (29328)

பற்பொடி, நீலம், சியாக்காய் பவுடர் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்றீஸ், பாடசாலை வீதி, ஆறுகால் மடம். (29327)

பெண் விற்பனையாளர்/காசாளர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவு தேவை. சொந்தக் கையெழுத்தில் முழு விவரத்துடன் விண்ணப்பிக்கவும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (29326)

### MATHS

ஆண்டு 5லிருந்து O/Lவரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறுடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6954)

### திருமண சேவை

எம்மிடம் அரசாங்கம், தனியார் உதியோகம், வியாபாரம், வெளிநாடு R/C, Non R/C மணமகன், மணமகள் உண்டு, தொடர்பு கொள்ளவும்: மெற்றோ ஸ்ரீல் இன்டஸ்றீஸ் (Off) சோமசுந்தரம் ஒழுங்கை, இல: 17/4, றெயில்வே வியூ, சுண்டிக்குளி, கச்சேரியடி (விவாகப் பதிவாளர் காரியாலயம் அருகில்) (29332)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்ல ரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி இனங்கள் குறுகிய காலத்தில் பயன்தரக் கூடியவை விற்பனைக்குண்டு. மு. காங்கேசு ஐயா கடையடி, மீசாலை. (6953)

### வாங்க/விற்க

காணி வீடு வாங்கவும், விற்பனை செய்யவும் பதிவுக் கட்டணம் இல்லை தொடர்பு கொள்ளவும். மெற்றோ ஸ்ரீல் இன்டஸ்றீஸ், (off) சோமசுந்தரம் ஒழுங்கை, இல. 17/4, றெயில்வே வியூ, சுண்டிக்குளி கச்சேரியடி (விவாகப் பதிவாளர் காரியாலயம் அருகில்) (29333)

## மூளாய் சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## நவகுண்ட 1008 கலச சங்காபிஷேகமும் தண்டிகை உற்சவமும்

சனீஸ்வரப் பெருமான் மகர ராசியில் இருந்து கும்பராசிக்குப் பெயர்ந்து செல்வதை முன்னிட்டு 11 — 02 — 1994 வெள்ளிக்கிழமை மூளாய்ப் பகுதியில் எழுந்தருளியிருக்கும் சித்தி விநாயகப் பெருமானுக்கு நவகுண்ட பட்ச சகஸ்ர கலச மகா சங்காபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள காரைநகர் மக்களின் உபயமாக நடைபெறவிருக்கும் இச்சங்காபிஷேகக் கிரியைகளை, ஊரெழுவைச் சேர்ந்த சிவகாமஞானபானு, சிவஸ்ரீபால, வைத்தியநாத சிவாசாரியர் பிரதம குருவாக இருந்து எட்டு சிவாச்சாரியர்களின் உதவியுடன் நடத்தி வைப்பார்.

10 — 02 — 1994 வியாழக்கிழமை காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும் கிரியைகள் அன்றும் அடுத்த நாளும் தொடர்ந்து நடைபெற்று, வெள்ளிக்கிழமை மத்தியானம் சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 4-00 மணிக்கு விநாயகப் பெருமான் வீதி வலம் வரும் காட்சியும் அதன் பின்னர் பிரசங்கங்களும் நடைபெறவுள்ளது.

இரண்டு நாட்களும் வேதபாராயணமும் திருமுறை பாராயணமும் நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை இலங்கையில் சகஸ்ர கலச மகா சங்காபிஷேகம் எங்குமே நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- காரைநகர் மக்கள்.

(29316)

## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

**INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE**

**ஆரம்பம்: 14th Feb. 1994**

★ தமிழ் விளக்கத்துடன் கூடிய இலகு விரிவுரைகள்
★ தவணை முறையில் கட்டணம்.

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, st. Peter's Lane,
Jaffna.

[சி-7223]

THE TRUTH SHALL MAKE YOU FREE — UDUVIL GIRLS' COLLEGE — A.D. 1824

## உடுவில் மகளிர் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

## G. A. Q - 95

பேராதனை பல்கலைக்கழகம்

★ எமது விரிவுரையாளர்கள் குழு ★

| | | |
|---|---|---|
| பொருளியல்:— | திரு. S. வரதராஜன் | B. A [Hons] |
| தமிழ்: — | திரு. S கணேசலிங்கம் | B A [Hons] |
| இந்து நாகரிகம்:— | திருமதி K பவசிங்கம் | B. A. [Hons] |
| அரசியல்:— | திரு. K. செல்வரட்ணம் | B. A [Hons] |
| மெய்யியல்: — | திரு S S மனோகரன் | B Com. |

இதற்கான பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்

நடைபெறுகின்றது **B. A. (PART - I)** யாழ் பல்கலைக்கழகம்

நடைபெறுகின்றது **B. A. (FINAL)** யாழ் பல்கலைக்கழகம்

மேலதிக விவரங்கட்கு

பணிப்பாளர்
உடுவில் மகளிர் கல்லூரி

(சி/7226)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்: 16 — 06 — 1920

ஆண்டவன் அடியில்: 10 — 01 — 1994

## திருமதி சின்னம்மா விஜயரத்தினம்

(Dr. க விஜயரத்தினம், மயூரா டிஸ்பென்சறி, காங்கேசன்துறை அவர்களின் பிரிய மனைவி)

அம்மா அம்மா என்றே அழுது புலம்புகின்றோம்
செந்நீரை கண்ணீரால் சேர்த்து வடிக்கின்றோம்
அன்பின் உறைவிடமே, பாசத்தின் பிறப்பிடமே
உங்களைக் காணாது தவிக்கின்றோம்
பண்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து ஆளாக்கி
விட்ட எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கிற்கு
எங்கள் கண்ணீர் அஞ்சலி!

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவின் போது, எமது துயரில் பங்குபற்றியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குரு வீதி,
காங்கேசன்துறை.

[29335]

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 07 — 06 — 1923

உதிர்வு: 25 — 01 — 1994

## பூ உலகிற் பூபாலர்

''நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடியவர்; ஆண்டவன் திருவீதிவலம் வந்து அடியார்களுக்குத் திருக்காட்சி கொடுக்கத்தக்க வகையில் மலரினாலே மஞ்சம் திருத்தொங்கல் சமைத்தவர். மணி தொண்டு பல்லக்கு ஆக்கியவர் இல்லங்களில் மங்களகரமாக இடம்பெறும் சுபகாரியங்களைத் தமது கைத்திறன் மூலம் சோபிக்க வைத்தவர். யாருக்கு யாருக்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்தவர். இசைஞானம் படைத்தவர். இசையோடு கூடியவர்களுடன் இசைந்து நடந்தவர் வாகனச் சிறப்பு உடையவர் வயது சென்ற நிலையிலும் வாலிபர் போலச் சுறுசுறுப்புடன் இயங்கியவர்''.

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் திருவீதியில் அமைந்த இல்லத்தைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டவரான அமரர் அருணாசலம் நடராசா அவர்களைப் பற்றிப் பலரும் மேற்கண்டவாறு பல திசைகளில் இருந்தும் பேசுவதையும் எழுதுவதையும் நோக்குகின்ற பொழுது மனம் பூரிப்பு அடைகின்றது.

''தம்பி உள்ளவன் சண்டைக்கு அஞ்சான்'' என்பார்கள். தம்முன் ஆகிய நடராசா அவர்கள்; எவருடனும் சண்டைக்குப் போனதுமில்லை. தம்பியர்களாகிய யாம் அவ்வகையில் உதவ வேண்டும் என்ற தேவை ஏற்படவும் இல்லை. தமக்கு இளையோர் நல்வாழ்வு பெறும் பொருட்டு இளமையிலேயே உழைத்தவர். மனைவி, மக்கள், மருமகரின் நல்வாழ்வு கருதிப் பிரார்த்தனை செய்தவர். சிவதலயாத்திரைகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொண்டவர் அரசன், உபாத்தியார், தாய், தந்தை, தம்முன் ஆகியோர்கள் ஐங்குரவர்கள் தம்முன்-தமக்கு மூத்தோர்.

திரு. நடராசா அவர்கள் பெற்றோர்களான அருணாசலம் இரத்தினம் தம்பதியினர் தவஞ்செய்தவர்கள் என்று நாடே போற்றத்தக்க வகையில், தமது குடும்பமும், விசேடமாகச் சைவசமய சமுதாயமும் பேண்மையுறும் வண்ணம் அல்லும் பகலும் அயராது உழைத்தவர்.

''ஈதல் இசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு''

என்பது திருவள்ளுவர் திருவாய்மொழி. ''வறியார்க்கு ஈக, அதனாற் புகழுண்டாக வாழ்க; அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை'' என்பது குறளின் கருத்து.

பூ உலகில் (மலர் உலகில்) அவர் ஒரு சக்கரவர்த்தியாகப் பிரகாசித்தார் பூவுலகில் (வையகத்தில்) வாழ்வாங்கு வாழ்ந்தார். இப்பொழுது வானுறையுந் தெய்வமாகி விட்டார். அவர் தவம் இருந்தவாறு!

- ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்.

நடராசா அவர்களின் ஆன்ம சாந்திக் கிரியைகள் இன்று முற்பகல் உரும்பிராயில் நடைபெறுகின்றன.

[29314]

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியசாலை

## நூற்றாண்டுக் கொண்டாட்டம் கல்வி அபிவிருத்தி நிதிக்கான கலை விழா

**(05 - 03 - 1994)**

- மங்களகரமான நாதஸ்வர இசை
- காதிற்கினிய கீதங்கள்
- கண்ணுக்கினிய நாடகங்கள்
- மயங்க வைக்கும் பாண்ட் வாத்திய இசை

அனுமதிச் சீட்டுக்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சி. சிவசரவணபவன், தலைவர்.
அ. தேவராசன், ஆ. சி. கணேசவேல், இணைச் செயலாளர்கள்.
பழைய மாணவர் சங்கம்

05-02-1994

[சி 7198]


குறுகிய மழைக்கால இடைவெளியின் பின் மீண்டும்!

## இதோ முதல் தொகுதி இரட்டை சூட்டடுப்புகள்

உங்கள் விறகினை மீதப்படுத்த தயாராகிவிட்டன

நீங்கள் இதுவரை கட்டிக்கொள்ளவில்லையா?

இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்



## இரட்டைச் சூட்டடுப்பு

உங்கள் விறகையும் பணத்தையும் மீதப்படுத்துவதோடு
தூய்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது,

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட செயலகங்கள்.
- கிராமிய உற்பத்திக்குழு வட்ட அலுவலகங்கள்.
- எமது முகவர் நிலையங்கள்

(வாரத்தில் சகல நாட்களிலும் பதிவு செய்து கொள்ளலாம்)

'சக்திப் பாதி'
த. பொ. மே. நிறுவனம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச்சந்தி,
தமிழீழம்

(சி/7195]

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி நரசிங்கம் பொற்கொடி

எமது கல்லூரியின் இரசாயனவியல்துறை ஆசிரியரும் எமது வகுப்பாசிரியருமான திரு ந. மகேஸ்வரன் அவர்களின் தாயார் திருமதி நரசிங்கம் பொற்கொடி அவர்கள் கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

12E (95) மாணவர்கள்
உயிரியல்பிரிவு
யாழ். இந்துக்கல்லூரி

(29339)

## கண்ணீர் அஞ்சலி

எமது இரசாயனவியல் ஆசிரியரும்
யாழ். இந்துவின் இணையற்ற ஆசிரியருமாகிய
திரு. ந. மகேஸ்வரன்
அவர்களின் தாயார்

### திருமதி நரசிங்கம் பொற்கொடி

அவர்கள் 04 - 02 - 1994 அன்று கொழும்பில் இறையடி சேர்ந்ததையிட்டு வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆண்டு 12A மாணவர்கள்.
யா. இ. க.

[29331]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் இரவில் மக்கள் நடமாடத் தடை!

## வீட்டு வளவுகளில் நடமாடவும் கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 9
மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் மாலை 6 மணிக்குப் பின்னரும்— இன்னும் சில பகுதிகளில் இரவு 7 மணிக்குப் பின்னரும் மக்கள் வீதிகளில் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் தெரிவித்தன.

வீடுகளில் உள்ள வளவுகளிலும் மக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் வீடுகளில் விளக்கு எரிக்கவும் படையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவசர நோக்கங்களுக்காக வெளியில் செல்ல விரும்புவோர் விளக்குடன் வெள்ளைக்கொடியைப் பிடித்தபடி அருகில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்குச் சென்று முன் அனுமதி பெற வேண்டும் என்றும் படையினர் அறிவித்துள்ளனர்.

### கிழக்கிற்கும், வவுனியாவுக்கும்

# இராணுவப் பிரிவுகள் பல அவசர அவசரமாக விரைவு

## தேர்தலை நடத்துவதில் அரசு தீவிர கவனம்

கொழும்பு, பெப். 9
கிழக்கு மற்றும் வவுனியாவில் உள்ளூராட்சி தேர்தல்களை முறியடிக்க, விடுதலைப் புலிகள் முயன்று வருவதாக அரசாங்கத்திற்கு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதனை அடுத்து மேலும் பல இராணுவப் பிரிவுகள் அப் பகுதிகளுக்கு அவசர அவசரமாக அனுப்பப்பட்டு வருகின்றன. மேலதிக பொலீஸாரும் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, தேர்தல் காலத்தில் தாக்குதல்களை நடத்துவதற்காக, விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவின் தலைவர் பொட்டு அம்மானும், பெரும் எண்ணிக்கையான போராளிகளும் கிழக்கிற்குள் ஊடுருவி இருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்று கொழும்பில் தகவல் வெளியாகியுள்ளது;

கிழக்கிலும், வவுனியாவிலும் தேர்தல் காலத்தில் எதுவும் நடக்கலாம் என்ற காரணத்தினால், படையினரின் முகாம்கள், பொலீஸ் நிலையங்கள், சோதனைச் சாவடிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும் படையினரும், பொலீஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், கிழக்கு மற்றும் வவுனியா நகரசபை ஆகியவற்றிற்கான உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

என்ன பிரச்சினை வந்தாலும் அதனை முறியடித்து தேர்தலை நடத்தியே தீருவது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஓ)

### தேர்தல் முன்னேற்பாடாக

# கிழக்கிற்கு மேலதிகமாக 500 பெண் பொலீஸார்!

கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் பாதுகாப்பில் ஈடுபடுத்துவதற்கென ஐந்நூறு பெண் பொலீஸார் மேலதிகமாக அங்கு அனுப்பப்பட இருக்கிறார்கள்.

வவுனியாவிலும் கிழக்கு மாகாணத்திலும் தேர்தல் கடமையில் ஈடுபடுத்துவதற்காக ஏற்கனவே 5 ஆயிரம் பொலீஸார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

பெண் வாக்காளர்களைச் சோதனையிடுவதற்காகவே பெண் பொலீஸார் அங்கு அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

### தேர்தல் நடவடிக்கையை குழப்ப

# புலிகள் வடக்கில் இருந்து கிழக்குப் பகுதிக்கு நகர்வு

## இராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, பெப். 9
தேர்தல்களைக் குழப்புவதற்கு விடுதலைப் புலிகள் மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம், கிழக்கில் மேலும் துருப்புக்களைக் குவித்து பாதுகாப்பை அங்கு நாம் பலப்படுத்தி வருகின்றோம்.

— கிழக்கில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவர் இவ்வாறு கூறியதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெற விருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை குழப்புவதற்கான ஒரு முயற்சியாக விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் போராளிகளை வடக்கில் இருந்து கிழக்கிற்கு நகர்த்திக் கொண்டிருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்திருக்கின்றன என சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஓ-5)

# அபிராமிப் பட்டர் விழா

வடமராட்சி, பெப். 9
பருத்தித்துறை கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் அபிராமிப்பட்டர் விழா நாளை வியாழக்கிழமை இரவு 7மணிக்கு நடைபெற உள்ளது.

மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் அருள் ஆசிச் செய்தியும், "அம்பிகையின் அருள் நலம்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகத்தின் சிறப்புரையும், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் அபிராமி அந்தாதி இன்னிசையும் இடம் பெறும். (ஓ-173)

# சத்ய சாயி பாபா போன்று பால சத்யசாயி பாபா!

ஹைதராபாத், பெப். 9
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா போன்று இன்னொரு சத்ய சாயி பாபா தோன்றியிருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் பரபரப்பான செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

ஆந்திரமாநிலம் ராயலசீமா பகுதியில் — சத்யசாயி பாபாவை ஒத்த தோற்றத்தில் — இளம் சுவாமியார் ஒருவர் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவர் தன்னை பாலசாயிபாபா என்று கூறிக்கொள்கிறார். "சக்தி"யின் ஆண் அவதாரம்தான் என்றும் அவர் சொல்கிறார்.

பாலசாயிபாபாவின் தகப்பனார் இராமநாத சாஸ்திரி. தாயார் ஜெயலட்சுமி. இசையில் பட்டம் பெற்ற இவருக்கு 12 மொழிகள் பேசத்தெரியும்.

அனந்தப்பூர் அருகில் உள்ள ஊரைச் சேர்ந்த இவருக்கு ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து போன்ற வெளிநாடுகளிலும் ஆதரவாளர்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இவரைச் சந்தித்து ஆசி பெறுவதோடு ஆலோசனையும் பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இவருடைய பிறந்த நாள் அண்மையில் கர்நூல்நகர் துங்கபத்திரா நதிக்கரையில் கொண்டாடப்படுவதாக இருந்தது. முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங், மத்திய மந்திரி அர்ஜுன்சிங் உட்பட பலர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விருந்தனர்;

சத்யசாயி பாபாவைப் போன்று பாலசத்யசாயி பாபாவும் விரைவில் உடல் ஊனமுற்றோர் மற்றும் "எய்ட்ஸ்" நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரு ஆஸ்பத்திரிகள் கட்டப் போவதாகக் கூறியிருக்கிறார்.

பாலசத்யசாயி பாபாவின் படத்தையும், பத்திரிகைகள் பிரசுரித்திருக்கின்றன. சத்ய சாயி பாபாவைப் போன்று அதே தோற்றத்துடன் — தலையைச் சுற்றி வட்டமாக சடைத்த தலைமுடியுடன் அவர் காணப்படுகிறார். (உ)

# பறந்து சென்ற 'கழுகு'கள் மீண்டும் திரும்புகின்றன!

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர்

கொழும்பு, பெப். 9
பறந்து சென்ற 'கழுகு'கள் மீண்டும் திரும்பி வருகின்றன. அந்தக் 'கழுகு'களின் இறகுகள் வெட்டப்பட்டுவிட்டனவா, இல்லையா என்பதை என்னால் நிச்சயமாகக் கூற முடியாது.

நீதி அமைச்சர் கரோல்ட் ஹேரத் இவ்வாறு கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி உட்பட பலர் ஐ. தே. கவில் இருந்து விலகிச் சென்றிருந்தனர் என்பதும்—

அவர்கள் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (டி. யு. என். எப்.) என்ற கட்சியை ஆரம்பித்தனர் என்பதும்—

அந்தக் கட்சியின் சின்னம் 'கழுகு' என்பதும் தெரிந்தவையே.

காமினி திசாநாயக்க மீண்டும் ஐ. தே. கவில் சேர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

# ஆலய கோபுரத்திலிருந்து 5 தொன் கல் சரிந்து விழுந்தது

## பூரி ஜெகந்நாதர் கோயிலில் சம்பவம்

பூரி, பெப். 9
ஒரிசா மாநிலம் பூரியில் புகழ்பெற்ற ஜெகந்நாதர் கோயிலில் சேதம் அடைந்த பகுதிகளைப் பழுது பார்க்கும் வேலைகள் கடந்த வாரம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது—

கோயிலின் முக்கிய பகுதியில் கோபுரத்தை ஒட்டி கூரையில் இருந்த — ஐந்து தொன் நிறையுடைய— கல் ஒன்று திடீர் என சரிந்து கீழே விழுந்தது. இதனால் கோயிலுக்குள் இருந்த தங்க கிரீடம் சுக்கல் சுக்கலாக நொறுங்கியது.

ஏராளமான பக்தர்களும் சுற்றுலாப் பயணிகளும் இக் கோயிலுக்கு வருவது வழமை. விபத்து நடந்த சமயமும் ஏராளமான பக்தர்கள் கோயிலுக்குள் இருந்தனர். தெய்வாதீனமாக அவர்கள் காயம் எதுவுமின்றி தப்பினர். (உ)

# ஆயருடன் சந்திப்பு

வட்டுக்கோட்டை, பெப். 9
தென் இந்தியத் திருச்சபை ஆயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசனை மெதடிஸ்த திருச்சபை நல்லெண்ணக் குழுவினர் கடந்த 6ஆம் திகதி சந்தித்து உரையாடினார்கள். (க-161)

# நில அளவையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப் 9
தமிழீழ நீதிமன்றங்களில் பணிபுரிய விரும்பித் தம்மைப் பதிவு செய்துகொண்ட சகல நில அளவையாளருக்குமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல்துறைப் பணிமனையில் நடைபெறும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள தமிழீழ நீதிமன்ற நில அளவை வேலைகளில் ஈடுபட விரும்புவோரும், இதுவரை தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாத அனுமதி பெற்ற நில அளவையாளர்களும் தமது பெயர்களை இத்தினத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியிருந்தும் அனுமதி இல்லாதிருக்கும் நில அளவையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நில அளவையில் ஈடுபட விரும்பினால், அவர்களும் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

நில அளவைக் கருவிகளை வைத்திருக்கும் சகலரும் இத்தினத்தில் அவற்றைப் பதிந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-க)

# பின்தங்கிய வகுப்பினருக்கும் சேவை கிடைக்க வேண்டும்

## இலங்கை வங்கி மேல்தரக்கிளை ஆண்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப். 9
இலங்கை வங்கியின் யாழ். மேல்தரக் கிளையின் சேவை இங்குள்ள திணைக்களங்களையும், நகர வர்த்தகர்களையும், வங்கியாளர்களையும், ஓய்வூதியர்களையும் மட்டும் சென்றடைகிறதே தவிர பின்தங்கிய வகுப்பினரைச் சென்றடைவதில்லை. இதற்கு இவ்வங்கியின் நிர்வாகத்தினர் வங்கி தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன்.

இலங்கை வங்கியின் யாழ். மேல்தரக் கிளையின் 50ஆவது ஆண்டு விழா அண்மையில் வங்கியின் முன்றிலில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு வாழ்த்துரை நிகழ்த்துகையிலேயே திட்டமிடல் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

வங்கியின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திட்டமிடல் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பகுதியில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளால் பின்தங்கிய இந்த வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் பலரும் இடம்பெயர்ந்து, பொருளாதார அழிவுகளுக்கு மத்தியில் வாழ்கிறார்கள். பின்தங்கிய தமது பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் எத்தனிக்கிறார்கள்.

ஆனால் தொழில் முயற்சிக்கான பணமின்றி அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். கீழ்த்தரமான இந்நிலையை உணர்ந்து, அவர்களுக்கு சுயதொழிலுக்கான கடன் சலுகைகளை அளிக்க வங்கி உதவ வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய வங்கியின் பிரதான முகாமையாளர் திருமதி க. துரைராஜா தாம் தலைமை அலுவலகத்துடன் இவ்விடயம் தொடர்பாக தொடர்பு கொண்டால் திருப்திகரமான பதில் கிடைப்பதில்லை என்று தெரிவித்தார்.

வாடிக்கையாளர்களால் தலைமை அலுவலகத்திற்கு கொடுக்கப்படுகின்ற அழுத்தத்தையே அவர்கள் கவனமாக பரிசீலிக்கிறார்கள். 1990 ஜூனில் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கடன் வழங்குதல் தடைபட்டிருந்தது. எனினும் 1993 டிசம்பரில் இருந்து குறிப்பிட்ட சிறுகைத் தொழில்கள் செய்வதற்கு கடன் வழங்குவதற்கு கொழும்பில் இருந்து உத்தரவு கிடைத்திருக்கிறது என்றார்.

இவ்விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தனது உரையில், வங்கிகள் வட்டிக்கடைகள் அல்ல. ஒரு நாட்டின் பொருளாதார சிந்தனைகளைக் கொண்டவை.

தனிமனித வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும் வேளையில் வங்கிகளின் செயல்பாட்டிலும் மாற்றம் வேண்டும். அப்போது தான் வங்கியின் சேவை முழு அளவில் பயன் உள்ளதாக அமையும் என்றார்.

மங்கள இசையுடன் ஆரம்பமான இவ்விழாவில் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் அதி வணக்கத்திற்குரிய கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் வழங்கினார்கள்.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்மினியம்மா, திலகநாயகம்போல், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், யாழ். தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, இளைப்பாறிய வங்கி ஊழியர்கள் திரு எஸ். பத்மநாதன், திரு. கே. இராமநாதன், மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் திரு. வி ஸ்ரீபத்மநாதன், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. ந. சிவபாலகணேசன், இலங்கை வங்கி சட்டத்தரணி திரு. எஸ் கனகரத்தினம், மின்வைத் தொழில் அதிபர் திரு. க. கனகராஜா, இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு. வி. தில்லைநாதன், இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. என். கணேசநாதன் ஆகியோரும் வாழ்த்துரைகளை வழங்கினர்.

இறுதியில் இலங்கை வங்கியின் யாழ். மேல்தரக் கிளையின் பகுதி முகாமையாளர் திரு. வி. வி. கே. பரமசாமியின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவு பெற்றது. (இ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டும் குழியுமாக குடாநாட்டின் பிரதான வீதிகள்!

## விபத்துக்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம் பெப். 9
சமீபத்தில் பெய்த கடும் மழை காரணமாக குடாநாட்டின் வீதிகள் சேதம் அடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த வாரம் கைதடிச் சந்தியில் விறகு ஏற்றி வந்த சைக்கிள் மீது மினிபஸ் மோதியதால் சைக்கிள் பலத்த சேதமடைந்தது. சைக்கிளோட்டி தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

அதே தினம் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி சந்தைக்கு முன்னால் நின்ற வாகனம் ஒன்றை எதிரே வந்த வாகனம் மோதியதில் வாகனத்திற்கு பின்னால் நின்ற வாயோதிபர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசையா (வயது 65) என்பவரே காயமடைந்தவராவார்.

இரவில் வெளிச்சமின்றி செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

வெளிச்சமின்றி வந்த லொறி ஒன்று மின் கம்பத்துடன் மோதியதில் லொறி கிளினர் தலையில் பலத்த காயம் அடைந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இவ் விபத்தில் புத்தூர் வடக்கைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் (வயது 22) என்பவரே காயம் அடைந்தார்.

வெளிச்சமின்றி வந்த லொறி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை கைதடிச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

மதகு ஒன்றுக்குள் லொறியின் முன் பகுதி இறங்கிய போதிலும் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. (இ-117)

## தாண்டிக்குளம் தடைமுகாமில் மக்கள் படும் சிரமங்களை பார்த்தார் லயனல்

கொழும்பு, பெப். 9
வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ, கடந்த வெள்ளியன்று வவுனியா தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதிக்கு விஜயம் செய்தார். அங்கு பொதுமக்களின் பயண வசதிகளை நேரில் பார்வையிட்டார்.

தாண்டிக்குளம் தடைமுகாம் ஊடாகப் பொதுமக்கள் சிரமம் இன்றிப் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டிய வசதிகளைச் செய்து தருவேன்'' என வடபகுதிக்குச் செல்வதற்காக அங்கு காத்திருந்த நூற்றுக்கணக்கான மக்களிடம் அவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மக்கள் தாம் படும் கஷ்டங்களையும் சிரமங்களையும் நேரடியாக வந்து பார்வையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு நூற்றுக்கணக்கான கடிதங்களை எனக்கு அனுப்பியுள்ளனர். என்றும்—

ஆளுநர் என்ற வகையில் விரைவில் நான் யாழ்ப்பாணம் செல்வேன் என்றும்—

திரு.லயனல் பெர்னாண்டோ அங்கு மேலும் தெரிவித்தார். (ஒ-எ)


## பதவி வெற்றிடம்

பிரபல பாடசாலை ஒன்றில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

வயதெல்லை: 20 — 40 வயது

முடிவுதிகதி: 15 — 02 — 1994

1. தோட்டத் தொழிலாளி
2. விளையாட்டு மைதான தொழிலாளி
3. தொழில் நுட்ப உத்தியோகத்தர்
4. பகல் நேரக் காவலாளி

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி;
[illegible] விளம்பர இலக்கம் 603,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

[சி-7197]



## இலங்கலைஞர் மன்றம் 14ஆவது ஆண்டு இசைவிழா

இடம்: மன்றக் கலாமண்டபம்
காலம்: 12 - 02 - 1994 — 26 - 02 - 1994
தினமும் பிற்பகல் 4 00 மணி — இரவு 10 00 மணி

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணுகானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப்பிரசங்கம், பரத நாட்டியம் போன்ற பலதரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்

இளங்கலைஞர்களும், முன்னணிக்கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-மேற்படி மன்றத்தினர்.

(சி-7192)



## COMPUTER கல்வி

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
(4 MONTHS)
திங்கள், புதன் 10-30 — 12 - 30
ஆரம்பம்: 14-02-1994
Fees மாதம் 400/-

LOTUS 1 - 2 - 3
(With Macro)
2 MONTHS
செவ்வாய், வியாழன் 2 - 30 — 4 - 00
ஆரம்பம்: 15-02-1994
Fees மாதம் 1000/-

★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ தமிழிலும் விளக்கங்கள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

உறுதியான கல்வியைப் பெற

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3RD CROSS STREET,
JAFFNA.


## வீரப்பனின் சகாக்கள் 8பேரே இன்னும் வெளியில்

### புதுக்கோட்டையில் தேவாரம்

சென்னை, பெப். 9
சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் கூட்டாளிகளில் எட்டுப்பேரே பொலீஸாரினால் இன்னும் பிடிக்கப் படாமல் உள்ளனர்.

தமிழ்நாடு மேலதிக பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் டபிள்யு. தேவாரம் இத்தகவலை புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இந்த எட்டுப் பேருக்கும் வெளியில் இருந்து உளவுத் தகவல்கள் கிடைப்பது தடுக்கப்பட்டுவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

வீரப்பன் விரைவில் பிடிக்கப்பட்டுவிடுவான் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஒ-எ)

## தமிழரின் கடைத்தொகுதிக்கு லண்டனில் தீ வைப்பு

### உடைமைகள் முற்றாக எரிந்து நாசம்

லண்டன், பெப் 9
லண்டனின் தென்பகுதியில் தமிழர்கள் அதிகமாக வாழும் டூடிங் என்ற இடத்தில் இலங்கைத் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான மிகப்பெரிய கடைத் தொகுதி ஒன்று தீவைத்து முற்றாக எரிக்கப் பட்டது.

கடந்த 31 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றது:

'சிவராஜ் என்டபிறைசஸ்' என்று அழைக்கப்படும் இத்தக் கடைத் தொகுதி முற்றாக எரிந்து சாம்பராகியது.

கடைத் தொகுதி அமைந்துள்ள மூன்றுமாடிக் கட்டடம் காலை ஒரு மணியளவில் தீப் பிடித்து மிக மோசமாகச் சேதமுற்றதாகப் பொலீஸார் கூறினார்கள். (ஒ-க)

## யாழ்ப்பாண கல்லூரி பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை, பெப் 9
யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை 12 ஆம் திகதி மாலை 3-30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி வணக்கத்திற்குரிய கெனத் பெனாண்டோவும் திருமதி சித்திரா பெனாண்டோவும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்வார்கள்.

கல்லூரி அதிபர் திரு ஜி. ஆர். இராஜநாயகம் தலைமையில் விழா நடைபெறும். (க-161)

## தமிழ்த்துறை ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் ஆய்வரங்குத் தொடரில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ''தமிழிலக்கிய மரபில் அழகியல்'' என்னும் தலைப்பிலான ஆய்வுரை இடம்பெறவுள்ளது இவ் ஆய்வரங்கு பொருளியல் துறைக் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும்.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நிகழவுள்ள இவ்வரங்கில், தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரையை வழங்குவார். (ஒ)

## மௌன ஊர்வலம்

வட்டுக்கோட்டை, பெப். 9
யாழ். மாவட்ட சிமெந்துக் கட்டடத் தொழிலாளர் சங்கம் சங்கானைக் கிளை 1 ஐச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வறுமைநிவாரணம் கோரி மௌன ஊர்வலம் ஒன்றை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனை [illegible] நடத்த தீர்மானித்துள்ளனர்.

## ஆலயங்களில்

காரைநகர் வாழ் மக்களால் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமையும் மறுதினம் வெள்ளிக்கிழமையும் நவகுண்ட நவரோத்திர 1008 கலச சங்காபிஷேகம் நடைபெறும். (க-28)

★ ★ ★

இருபாலை கிழக்கு சிவன் கோயில் கடந்த 1ஆம் திகதி ஆரம்பமாகிய அலங்கார உற்சவத்தின் பூர்த்திவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறும். (க)

★ ★ ★

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய அபிராமிப்பட்டர் திருவிழா நாளை வியாழக்கிழமை மாலை நடைபெறும்.

நூறு அபிராமி அந்தாதி பாடல்களை மனனம் செய்து சொல்பவருக்கு அன்று பரிசுகள் வழங்கப்பட உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்தினர் செய்துள்ளனர். (க-28)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 9
யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் ஒழுங்கு செய்துள்ள ''சமூக சேவை - எண்ணக்கருவும் நடைமுறையும்'' என்ற பொருளிலான கருத்தரங்கம் இன்று புதன் கிழமை மாலை 3 மணிக்கு, பல்கலைக்கழக முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நிகழவுள்ளது.

சமூக சேவை உத்தியோகத்தர் திரு. ஆ. இராமநாதனின் கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெறும். (ஒ)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், பெப்: 9
விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு திட்ட உத்தியோகத்தர், தொழில் நுட்ப உத்தியோகத்த, பெரும்பாக உத்தியோகத்தர், சமூக சேவைகள், சிறு பணியாளர் சேவை ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவு திகதி இம் மாதம் 24 ஆம் திகதி ஆகும்.


பருத்தித்துறை - கோட்டுவாசல்

## அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம்

## அபிராமிப்பட்டர் விழா

10 - 2 - 1994

மாலை 4 — 30 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனை
மாலை 5 — 00 மணிக்கு பூஜை

இரவு நிகழ்ச்சிகள்

இரவு 6 — 00 மணிக்கு மங்கள இசை
பருத்திநகர் தவில் சகோதரர்கள்
திரு M.S. விஜயகுமார், திரு. M.S. சதீஸ்குமார்
நாதஸ்வரம் இசை ஞானவாருதி
திரு. V K. நம்பிராசா, திரு S. செல்வம்

இரவு 6 — 30 மணிக்கு அருள் ஆசிச்செய்தி
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் J.P.

அருள் ஆசிச் செய்தியும், அருள் ஆசியும் வழங்குபவர்
சிவஸ்ரீ இ. சுந்தரேச குருக்கள் அவர்கள்
(ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)

வரவேற்புரை: திரு. ஆ. வ. தங்கராசா அவர்கள்
(முன்னைநாள் வடமராட்சி, உதவிக் கல்விப்பணிப்பாளர்)

இரவு 7 — 00 மணிக்கு சிறப்புரை:
தலைப்பு: அம்பிகையின் அருள்நலம்
வழங்குபவர்; திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர்)

இரவு 7 — 30 மணிக்கு இசை ஆராதனை
அபிராமி அந்தாதி இன்னிசை
வழங்குபவர்: இன்னிசை வேந்தர் சங்கீத பூஷணம்
திரு. பொன் சுந்தரலிங்கம் குழுவினர்
(பாட்டு)

மிருதங்கம்: இசைஞான திலகம், திரு. S. மகேந்திரன்
வயலின்; இசைஞான திலகம், திரு. V.R. ராதாகிருஸ்ணன்
கெஞ்சிரா: சங்கீத இரத்தினம், திரு. S. துரைராசா.
கடம்: வித்துவான் திரு. சதா வேல்மாறன்.
ஒலி, ஒளி; வாணி சவுண்ட், பருத்தித்துறை:

- விழா உபயகாரர்.

(சி-7199)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## அறிஞர் க. சி. கு.

தமிழீழத்தில் தமிழும் சைவமும் அழுகின்றன. தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும், சைவத் தொண்டர்களும், சைவாபிமானிகளும் தேம்புகின்றனர். அவர்களைத் தேற்றமுடியாத அளவுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு மூதறிஞர், பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினத்தின் மறைவாகும்.

தமிழீழம் தனது சுதந்திரத்தை நாடி நிற்கும் காலம் இது. எந்தக் காலத்திலும் இல்லாதவாறு தமிழ் எழுச்சியும், பற்றும் வீறுகொண்டு பொங்குகின்ற காலம் இது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எம்மிடையே வாழும் தமிழ், சைவச் சுடர்கள் ஒவ்வொன்றாக ஒளிமங்கி வருகின்றன.

மரபு வழியான சமயத் தமிழ்க் கல்வியைப் பெற்று தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றுவதில் தம்மை அர்ப்பணித்த பேரறிஞர்கள் பலர் அண்மைக் காலமாக சாய்ந்துவிட்டனர். அந்தப் பரம்பரையின் ஈடிணையில்லா தமிழ்மாமலை, தமிழ் மாமுனி குலரத்தினத்தின் இழப்பு எந்த வகையிலும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

மூதறிஞர் க. சி. குலரத்தினம் அவர்கள் தமிழுக்கு, தமிழ் இலக்கியத்துக்கு, தமிழர் வரலாற்றுக்கு, சைவத்தின் வளர்ச்சிக்கு, மட்டும் அணிகலன் சேர்த்தவரல்லர். ''செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்'' ''சைவம் வளர்த்த சான்றோர்கள்'' ''தமிழ் தந்த தாதாக்கள்'' ஆகிய அவரது அரிய நூல்கள் ஈழத்தின் தமிழ், சைவப் பெரியார்களை மட்டும் புதிய சந்ததிகளுக்கு அறிமுகம் செய்யவில்லை. அவரே செந்தமிழ் வளர்த்த செம்மலாகவும், சைவச்சான்றோனாகவும் அறிமுகமானார் ஈழத்து அகத்தியராக மிளிர்ந்தார்.

இங்கே இன்னுமொன்றைக் குறிப்பிட்டாக வேண்டும், எமது மண்ணுக்கு, இனத்துக்கு, மொழிக்கு, சமயத்துக்கு, கலைக்கு என்று பல்வேறு துறைகளில் சீரிய தொண்டாற்றிய செம்மல்களுக்கு தமது விவரங்களை, சேவைகளை, அனுபவங்களை எழுதிவைக்கும் பழக்கம் இருக்கவில்லை. அவர்களது சமகாலத்தில் வாழ்ந்தவர்களும் காய்தல், உவத்தல் காரணமாக அந்த முக்கிய பணியை செய்யவில்லை. இந்தக் காலத்திலும் இதே குறைபாடு உண்டு.

ஈழநாட்டு தமிழ், சைவப் பெருமக்களின் மொழி, சமய வளர்ச்சிப் பங்களிப்புக் குறித்த அறிவுக் குறையையும், ஆர்வக் குறையையும் நீக்கும் பொதுநோக்கில் பல ஆக்கங்களைச் செய்தவர் மூதறிஞர் க. சி. கு. அதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்தவர். அந்தப்பணி வேறு எவரும் செய்யாத தனித்துவமான சிறப்புமிகு பணி.

மேலும் அவர் பழமையில் காலூன்றிப் புதுமையை ஒப்பீடு செய்து நயப்பதிலும் முதன்மை பெற்று விளங்கினார். அவரது அறிவும், ஆற்றலும், அனுபவமும் ஓரிரண்டு துறைகளோடு நின்றுவிடவில்லை. தமிழ், சமயம், வரலாறு, பூகோளம், அரசியல், விஞ்ஞானம், மருத்துவம் என்று மனித வாழ்வின் சகல துறைகளிலும் பரவி, விரவிப் படர்ந்திருந்தன. அதனால் அவர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே விளங்கினார். சிறு துண்டுப் பிரசுரங்களாக வெளிவந்த அவரது ஆக்கங்கள் கூட, தகவற் களஞ்சியங்களாக மிளிர்கின்றன. மதிநுட்பம் நிறைந்த உயிருள்ள தகவற் பெட்டியாக, நவீன கால கம்பியூட்டரையும் விஞ்சியவராக, அவர் விளங்கினார். அவரின் பன்மொழிப் புலமையும், அவற்றின் வித்துவமும் அவரை ஓர் அறிவுப் பேராழியாக்கின.

அவர் வயதில் மூத்தவராக இருந்த போதிலும், இறைவன் கழல் எய்தும் வரை இளைஞனாகவே செயற்பட்டார். நான் தமிழன், இது எனது மண், தமிழ் எனது மொழி, சைவம் எனது சமயம், மக்கள் எனது மக்கள், நாடு எனது தாய்நாடு என்று எல்லாவற்றிலும் சுதேசியம் பேணிய தீர்க்க தரிசனம் கொண்ட தமிழ் மகன். அதனால் அவரது நினைவு நீண்டு நிலை பெறும்.

## ஊழல்களை விசாரித்ததால் அடுத்த அதிகாரிக்கும் சிக்கல்!

சில உயர்நிலை அரசியல்வாதிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரித்த பதில் பிரதி லஞ்ச ஆணையாளர் விஜேஹெட்டியாராச்சியையும் அப்பதவியில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு ஹெட்டியாராச்சி ஏற்கனவே வகித்து வந்த உதவி லஞ்ச ஆணையாளர் பதவியில் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயர்நிலை அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வந்த திருமதி நெலும் கமகே லஞ்ச ஆணையாளர் பதவியில் இருந்து ஏற்கனவே அகற்றப்பட்டு, நீதி அமைச்சில் உயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே. (உ-எ)

## ஆசிரியர் நியமனங்கள் வடக்கு - கிழக்கில் இல்லை

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப் 9

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு ஆசிரியர் நியமனத்தையும் தற்போதைக்கு வழங்க வேண்டாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இதுவரை நியமனம் வழங்கப்படாமல் எஞ்சியுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கும், ஏனையோருக்கும் பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள இத் தருணத்தில் —

கல்வி அமைச்சினால் மாவட்ட கல்வித் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் மறு அறிவித்தல் வரை எந்தவோர் ஆசிரியர் நியமனத்தையும் வழங்க வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## 'தடா' கைதிகளைச் சந்திக்க விதிக்கப்பட்ட தடை ரத்து!

### கலைஞர் மனு மீது நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, பெப். 9

பயங்கரவாதம் மற்றும் சீர்குலைப்பு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் ('தடா' சட்டத்தின்) கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை வழக்கறிஞர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் தவிர வேறு எவரும் சென்று பார்ப்பதை தடைசெய்யும் தமிழ்நாடு அரசின் உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்துவிட்டது.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தாக்கல் செய்த ரிட் மனுவை நீதிபதி எம். சீனிவாசன், நீதிபதி எம். தங்க மணி ஆகியோர் அடங்கிய பிரிவு அனுமதித்தது

தமிழ்நாடு அரசின் இந்த உத்தரவு தன்னிச்சையானது, நியாயமற்றது. அரசியல் சாசனத்துக்கு புறம்பானது என்று நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

பந்தோபஸ்து காரணங்களுக்காக இந்த அம்சம் புகுத்தப்பட்டிருந்தால் வேறு வழிகளில் கூட போதுமான பாதுகாப்பு செய்யமுடியும் என்றும் அந்த பெஞ்ச் கூறியுள்ளது. (உ-3)

## மழையினால் நெல் அறுவடை பாதிப்பு

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக விட்டு விட்டு மழை பெய்து வருவதால், பெரும்போக நெல் அறுவடை பாதிப்படைந்துள்ளது.

ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, ஓரளவு விளைச்சலை மட்டுமே பெற்றிருந்த விவசாயிகள் தற்போதைய மழை காரணமாக மேலும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, விவசாயிகள் சிலர் நெல்லை அறுவடை செய்து மேட்டு நிலங்களில் வைத்து சூடு அடித்து வருவதையும் காண முடிகிறது. (ஒ-17)

## பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் இலலை

வலிகாமம் தெற்கு, பெப். 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

1989 ஆம் ஆண்டு மத்திய அமைச்சினாலும், 1990 ஆம் ஆண்டு மாகாண கல்வி அமைச்சினாலும் பல பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்கள் தற்காலிக நியமனத்துடன் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

கிளிநொச்சி, வவுனியா, திவகம் போன்ற மாவட்டங்களில் கடமையாற்றும் பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களுக்கு கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு. உரிய சம்பளமும் வழங்கப்பட்டு வரும் வேளையில்,

யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனமோ, உரிய சம்பளமோ வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவுக்குவீஸா வழங்கும் நடமுறை சீரமைப்பு

கொழும்பு, பெப். 9

இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்ய விரும்புபவர்களுக்கு வீஸா வழங்குவதற்கு முன் அவர்களின் விண்ணப்பங்கள் முழுமையாக பரிசீலிக்கப்படுகின்றது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையான இலங்கையர் இந்தியாவுக்கு பயணம் செய்ய விண்ணப்பிப்பதால் வீஸா வழங்கும் முறையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தூதரகம் தெரிவிக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பை வளர்க்கும் வகையில் வர்த்தக வீஸாக்கள் விண்ணப்பிக்கும் தினத்தன்றே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## பயிலுநர்கள், பணியாளருக்கு நிரந்தர நியமனம்!

யாழ். மாவட்டத்தி உள்ள அரசாங்க திணைக்களங்களில் பணிபுரியும் பயிலுநர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசாங்க திணைக்களங்களில் பணிபுரியும் பயிலுநர்கள் பணியாளர்களின் விபரத்தை உடனடியாக தமக்கு அனுப்பி வைக்குமாறும், அவர்களை நிரந்தரமாக்குவதற்கு துரித நடவடிக்கைகளை எடுக்குமாறும் திணைக்கள தலைவர்களை பொது நிர்வாக அமைச்சு கேட்டுள்ளது. (த-எ)

## டி.பி. தந்த விருதை ஏற்றுக்கொள்ள சிறிமா மறுப்பு

கொழும்பு, பெப். 9

சுதந்திரதினத்தை ஒட்டி ஜனாதிபதி விஜேதுங்க வழங்கிய 'லங்காபிமான்ய' என்ற உயர் விருதை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மறுத்து விட்டார்.

'சண்டே ரைம்ஸ்' இச் செய்தியை வெளியிட்டது

தேசிய தினத்தை ஒட்டி விருதுகள் வழங்கும் நடைமுறையைத் தாம் எப்போதுமே எதிர்த்து வருவதாக திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (உ-எ)

தொண்டாவின்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரிடம் மன்னிப்புக் கோர வைத்தார் என்றும் —

அதற்கு தொண்டமான் தாம் மன்னிப்பதற்கு முன்பு இ. தொ. காவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்று கோரினார் என்றும் —

அத்துடன் செல்லச்சாமி உட்பட மற்றும் 8 அதிருப்தியாளர்களும் இ.தொ.காவின் தேசிய சபை முன் சமுகமளித்து பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று அவர் நிபந்தனை விதித்தார் என்றும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன:

தங்கள் மீதான இடைக்காலத் தடையை இ. தொ. காவின் தேசிய சபை விலக்கிக் கொண்டால் மட்டுமே தாங்கள் நீதிமன்ற வழக்கை வாபஸ் வாங்க முடியும் என்று அதிருப்தியாளர்கள் பதிலளித்தனர் என்றும் —

அதனால் சமரச முயற்சி தோல்வியடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

புலிகள் - அரசு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை —

இருதரப்பினர் மத்தியிலும் நம்பிக்கைத் தன்மையைக் கட்டி எழுப்புவதற்கு முதற்படியாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் —என்று கடந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேசிய கத்தோலிக்க திருச்சபைத் தூதுக்குழு ஆலோசனை கூறியுள்ளதாக ''சண்டேரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

இரு தரப்பினரிலும் பேச்சுவார்த்தைக்கான அக்கறை தெளிவாகத் தெரிவதைத் தூதுக்குழுவினரால் அறிய முடிந்தது என்றும் அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விஜேதுங்காவை கத்தோலிக்க தூதுக்குழு சந்தித்தபோது அவர் —

இன நெருக்கடியைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் ஒட்டு மொத்தமான தீர்வு ஒன்று குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்தார் என்றும் அதே பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (அ-எ-ஒ-5)

நம்பிக்கையில்ல...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் வெளியிட்டுள்ளது.

★ ஊழலில் ஈடுபட்டோரைப் பாதுகாப்பதற்காக, ஊழல் குறித்து விசாரித்து வந்த லஞ்ச ஆணையாளரை அப்பதவியிலிருந்து அரசு அகற்றியது.

★ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதற்கு சட்ட விரோதமான முறையை அரசு நாடியுள்ளது

★ சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசு பின் நிற்கிறது

★ ஜனநாயக விரோத முறையில் தென்மாகாணசபை உறுப்பினர் ஒருவரைக் கடத்தி மறைத்து வைத்தமை தென்மாகாண சபையைக் கலைத்தமை, அதன் மூலம் மீண்டும் மாகாணசபைத் தேர்தலுக்கு அதிக பணத்தை செலவிட வேண்டிய வீண் விரய நிலையை ஏற்படுத்தியமை.

★ சூரியகந்தவில் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் குறித்தும் —

எம்பிலிப்பிட்டியாவில் பாடசாலை மாணவர்கள் காணாமற் போனது குறித்தும்—மக்களுக்கு பதில் சொல்லாமல் மௌனமாக இருந்து வருதல்.

★ விலைவாசியைக் கட்டுப்படுத்த தவறியமை. (உ-3-ஒ)

## யாழ் வந்த கத்தோலிக்கக் குழு ரணிலை சந்தித்துப் பேசியது

யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பிய கத்தோலிக்க மத குருமார் தூதுக்குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசியது. பிரதமரின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் இச் சந்திப்பு நிகழ்ந்தது.

அதற்கு மறுநாள் தான் அனுராதபுரம் மேற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் பேசுகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் விருப்பத்தை ஜனாதிபதி விஜேதுங்கா வெளியிட்டார் என்று ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு தமது யோசனைகளை சமர்ப்பிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இருவாரங்களுக்கு முன்னர் விடுத்த அழைப்பைத் தொடர்ந்தே, சமாதான முயற்சிகள் ஆரம்பமாகின என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது

அரசியல் தீர்வு காணுவதில் அரசாங்கம் அக்கறையாக இருப்பதை ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு வரும் ஒரு நடவடிக்கையாகவே பிரதமரின் அழைப்பை சில அவதானிகள் கருதினார்கள்.

வேறு சிலர் பிரதமரின் அழைப்பு,இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றை காணுவதற்கு அரசமைப்பு ரீதியான உத்தரவாதங்களை வழங்க அரசு தயாராக இருப்பதை கோடி காட்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர் தம்மைச் சந்தித்த யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகரிடம் பேச்சுவார்த்தை நடத்துவதில் விடுதலைப் புலிகள் அக்கறையாக உள்ளனரா என்று பிரதமர் ரணில் கேட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## ஆசிரியர் சமூகத்தின் பணிகளை விளக்கும் நூல்வெளிவர வேண்டும்

### 'படிப்பு' நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப். 9

''மாணவர்களின் வளர்ச்சிக்கு உகந்த நூல்கள் பல வெளிவரவேண்டும். அத்துடன் ஆசிரியர் சமூகத்தின் பணிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தும் நூல்களும் வெளிவர வேண்டும்.''

''படிப்பு'' நூல் வெளியீட்டு விழாவில் தலைமை வகித்த கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன் இவ்வாறு கூறினார்.

முன்னாள் யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. பி. கே. பாலசிங்கம் எழுதிய இந் நூலின் வெளியீட்டு விழா கடந்த 27ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

இன்று விஞ்ஞானக் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது. அது குறித்த கற்பித்தல் முறைகளையிட்டு ஆசிரியர்கள் சிந்திக்கக் கூடியதாக இந்த நூல் அமைந்துள்ளது.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் பேசும்போது கூறியவாவது:

எமது கல்வித்தரம் எவ்வாறு அமைய வேண்டும்; அதற்கு நாம் செய்யவேண்டியது என்ன; பாடசாலைக் கல்வியா தனியார் நிலையக் கல்வியூடாகப் பெறப்படும் கல்வியா என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் மாணவர்களின் வளர்ச்சிக்கு உகந்தது எது?— இப்பிரச்சினைகளை ஆசிரியராக, பெற்றோராக, மாணவனாக நின்று எடுத்துக்காட்டும் ஆசிரியரின் முயற்சி எம்மைச் சிந்திக்க வைக்கிறது. எமது இனம் கல்வியில் உயர்ந்து விளங்க வழிகாட்டியாக இந் நூல் அமைகிறது.

கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், பேராசிரியர் வ. ஆறுமுகம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. வேலாயுதம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா, திரு. பா. பாலசங்கர், வேம்படி மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி இ. இராசரத்தினம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினார்கள்.

யாழ். தெற்கு கல்விப் பணிப்பாளர் செல்வி ரி. பெரியதம்பியிடம் இருந்து நூலின் முதற் பிரதியை திரு. த. சண்முகலிங்கம் ஜே. பி. பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியர் திரு பி. கே. பாலசிங்கம் தனது ஆசிரியர்களான திருவாளர்கள் க. சிவராமலிங்கம், வே. போசெப், வை. சுப்பிரமணியம் ஆகியோரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் பதிலுரையும் வழங்கினார். (க-111)

## முன்னாள் தூதர் கொழும்பில் கொலையுண்டார்

கொழும்பு, பெப். 9

சுவீடனுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் பத்திர பாலவிக்கிரமதுங்க கொழும்பு வஜிரா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான விசாரணையை விசேட பொலீஸ் குழு மேற்கொண்டு வருகிறது. (உ-3)

காய்ச்சல்...
( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(32 வயது கண்டாவளை, ஆகிய மூவரும் செப்ரிஸீமியா வினாலும்—

நகுலேஸ்வரன் தர்சிகா (2 வயது) பளை, மலேரியா வினாலும்—

விவேகானந்தன் பிரேமதர்ஷன் [இரண்டரை வயது] உடுவில், நியோனியாவினாலும் இறந்துள்ளனர்.

மலேரியா, செப் ரிஸீமியா, நெருப்புக்காய்ச்சல், நிமோனியா ஆகிய நான்கு வியாதிகளும் குடாநாட்டில் தீவிரமாகப் பரவுகின்றன. இவை உயிர்கொல்லி நோய்களாக மாறி வருகின்றன.

இந்த நான்கு நோயால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் பல வார்ட்டுகள் இந்த நான்கு நோய்களினாலும் பீடிக்கப்பட்டவர்களால் நிரம்பியுள்ளன. படுக்கை வசதி இல்லாததால் நோயாளர்கள் தரைகளில் தங்கியுள்ளனர். இட நெருக்கடியால் நோயாளர்கள் அளவுக்கு அதிகமாக அடைபட நேர்ந்துள்ளது. வார்ட்டுகளில் மலசல கூட வசதிகளும் போதவில்லை. (அ-15)

## வலி - மேற்கில் 300 பேருக்கு மாதாந்த உதவிப்பணம்

வலிகாமம் மேற்கு, பெப். 9

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 300 பேருக்கு புதிதாக பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா வினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் கடந்த வருடம் பொதுசன மாதாந்த உதவிப் பணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலுவையாக இருந்த சுமார் 2 லட்சம் ரூபாவையும்— வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25கிராம உத்தியோகத்தர்கள் பிரிவிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 300 பேருக்கும் — கடந்தவருட அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கும் வழங்குவதற்குரிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இருந்து 12பேர்இந்தஉதவிப்பணத்தை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சமூக சேவை உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் தகுதியானவர்களை தெரிவு செய்துள்ளனர்.

300 பேருக்கும் தற்காலிகமாக வழங்கப்படும் இப் பணத்தை தொடர்ந்து வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா மேற்கொண்டுள்ளார். (த-175)

## வட்டு. வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி ஒருவரே!

வட்டுக்கோட்டை பெப். 9

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்திய அதிகாரி மட்டுமே கடமை புரிகிறார் இதனால் நோயாளர்கள் சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர்

வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள் மற்றும் வெளி நோயாளர்கள் அனைவரையும் இந்த வைத்திய அதிகாரியே பெரும் வேலைப் பளுவின் மத்தியில் கவனித்து வருகிறார்.

மிக அவசரத் தேவைகளுக்காக இந்த அதிகாரி விடுமுறையில் செல்லும் போது, நோயாளர்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். (ஒ-161)

## விவசாயிகளுக்கு உதவ விவசாய சேவை நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 9

விவசாயிகளின் நன்மை கருதி யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் விவசாய சேவை நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விவசாயத்திற்கு தேவையான உள்ளீடுகளையும் விவசாய இயந்திரங்கள் அவற்றின் உதிரிப்பாகங்களையும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவித்து நியாய விலையில் விவசாயிகளுக்கு கிடைக்க வழி செய்வதே இந்நிலையத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உள்ளீடுகளை இந்நிலையத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-163)

## இது நாளில் எங்குற்றான்?

முதுதமிழ் முனிவனோ; மூத்தநற் றோனோ;
மூவெயி லெரித்த முக்கண் முதல்வனோ;
பதுமன் நாவுறை பாரதியோ வென்று
பல்லோர் போற்றும் பல்குரிசி லாசான்
புதுமையும் பழமையும் படித்துப் பன்னூல்
பிழிந்து நறுந்தேன் பொழி(க) · சி கு"என்பான்
இதுநாளி லெங்குற்றான்? இனியெங்கு கேட்பேன்,
இவன் பொன் நாவால் இயம்பிய கதைகளம்மா?

— அது. வை நாகராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை விஸ்வகர்ம சங்கம்
யாழ்ப்பாணம்

## தை அமாவாசைத் திருவிழா

வருடாவருடம் திருக்கேதீசுவரத்தில் மேற்படி சங்க ஆதரவில் நடைபெறும் தை அமாவாசைத் திருவிழா தற்போதைய நிலமைகாரணமாக 10-2-94 வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் யாழ்ப்பாணம், வண்ணை நாச்சிமார் கோவிலில் நடைபெறவுள்ளது.

சகல உறுப்பினர்களும் இவ்வறிவித்தலை ஏற்று விழாவில் பங்குபற்றி அம்பிகையின் நல்லருளைப் பெற்றுய்வீர்களாக.

த. பரராசசிங்கம் J.P.
செயலாளர்

ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி
தலைவர் [29336]

# மரண அறிவித்தல்கள்

## சோமசுந்தரம் மாணிக்கவாசகர்
(ஓய்வுபெற்ற மலாயன் பென்சனியர்)

சோமசுந்தரம் மாணிக்கவாசகர் (ஓய்வுபெற்ற மலாயன் பென்சனியர்) 8-2-94 இல் காலமாகி விட்டார்.

அன்னார் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற ரத்தினசபாபதி (Retired P. H. I., கிளிநொச்சி) திருமதி வீரவாகு நாகரத்தினம், காலஞ்சென்ற நமசிவாயம் (Storekeeper, M. P C. S., கிளிநொச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (9-2-94) புதன்கிழமை காலை 10 மணிக்கு 184, பொன்னாலை வீதி, சுட்டுடையில் உள்ள அவரது இல்லத்தில் ஆரம்பமாகி, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வீரராகவன்
(மருமகன்)

சுட்டுடை,
மானிப்பாய். (29334)

## வி. கே. இராசையா
(முன்னாள் இ. போ. ச. போமன்)

வி. கே. இராசையா அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை [8 - 2 - 94] காலமானார்.

இவர் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், திருச்செல்வத்தின் [சுவிஸ்] அன்பு தந்தையும், சொர்ணலட்சுமியின் மாமனாரும், சோமாஸ்கந்தன், கோமதி, சுபாசினி, கஸ்தூரி ஆயோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொக்குவில் மஞ்சவனப்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று புதன்கிழமை (9 - 2 - 94) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி திருச்செல்வம்
[மருமகள்]

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (29341)

## A.C. நடராஜா
(சட்டத்தரணி)

திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமான திரு. A. C. நடராஜா 6-2-94 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிமுத்து -தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அருமைக் கணவரும், அன்னபூரணத்தின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற திரு. V.K. சின்னத்தம்பி திரு. த. துரைசிங்கம் (சட்டதரணி — கொழும்பு), மகேஸ்வரி, காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி பரஞ்சோதி, திருமதி நாகேஸ்வரி பொன்னையா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனஸா, ஜயந்தன், ஆதவன், ரேணுகா, சசி ஆகியோரின் அருமைத் தந்தையும், நடேசன், சத்தியதேவி, சியாமளா, சிவாஜி, சத்தியபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நரேந்திரன், சுதர்ஷன், தனஞ்செயன், அபிராமி, சஞ்சீவன், சங்கீதா, சிந்துஜா ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 9-2-94 இல் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
DR. நடேசன்
(Dental Surgeon)

116, ஹல்ஸ்டோர்ப் ஒழுங்கை,
கொழும்பு 12. (29344)

## திருமதி கந்தசாமி திலகவதி
(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரம் திருமதி கந்தசாமி திலகவதி காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், நாகேஸ்வரன் (பிரான்ஸ்), நாகராசேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நீலவண்ணன் (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ் சென்ற திரு திருமதி நாகமுத்து வயிரப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி வீரவாகு செல்லமுத்து ஆகியோரின் மருமகளும், சோமசுந்தரம், பத்மநாதன், தனபாக்கியம், திருநாவுக்கரசு, பாலகிருஷ்ணன், ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6- 2- 94 ல் நயினாதீவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்
நா பத்மநாதன்
(சகோதரன்)

13 /1A கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
[கமலக் கண்ணன் வீதி]
சுண்டுக்குளி (29340)

வரலாற்று பெருமை மிக்க
ஈருடகத் தாக்குதல்

15 - 02 - 94 முதல்
அதிசயம்! ஆனால் உண்மை!!

## 'ஒப்பரேசன் தவளை'
(முழு நீள பூநகரிச் சமர்)

★ சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும், கலை ஊடக இணையத்தில், உங்கள் பதிவுக்கான வீடியோ நாடாவை முன் கூட்டியே வழங்கி பதிவு செய்த (RECORDING) நாடாவை பெற முந்திக் கொள்ளுங்கள்.

★ இது தமிழீழ வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த பொக்கிஷமாகையால், அனைத்து தமிழீழ மக்களும் வைத்திருக்க வேண்டிய ஒளி நாடா.

குறிப்பு:
''ஒப்பரேஷன் தவளை'' பதிவு செய்து விநியோகிக்கும் உரிமை கலை ஊடக இணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது

கலை ஊடக இணையம்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
[29337]

## SPOKEN ENGLISH

ஆரம்பத்திலிருந்து விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது

Lectures BY V N Kandasamy

ஆரம்பம்: 12-02-1994

விவரங்கட்கு

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, ST PETER'S LANE, JAFFNA.
(சி/7227)

## இதய அஞ்சலி



ஒரு யுகத்தின் வரலாறு கூறும் கணனி
மறைந்த முதறிஞர்
க. சி. குலரத்தினம் அவர்களின்
ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்
வண்ணை ஸ்ரீ வீரமகாளி அம்மன்
தொண்டர்கள்
(29342)

## 1 ஆம் ஆண்டு நினைவுநாள்

அன்னை மடியில்: 15 — 02 — 1922



ஆண்டவன் அடியில்: 20 — 01 — 1993

திதி 09 02-1994

## நாகலிங்கம் சுப்பிரமணியம்
(உரிமையாளர், மணியம் கடை, சூராவத்தை, சுன்னாகம்)

குடும்பத்திற்கும், உறவினருக்கும் தலைவனாகவும் நண்பர்களுக்கு இனிய நண்பனாகவும், சூராவத்தை முத்துமாரி அம்மன் கோவில பரிபாலன சபைக்கு நல்ல தொண்டனாகவும் திகழ்ந்த பெருந்தகையே தாங்கள் எம்மைவிட்டு பிரிந்துவிட்டாலும் தங்களின் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை,
சூராவத்தை
முத்துமாரி அம்மன்கோவில்
பரிபாலன சபையினர்.

சூராவத்தை,
சுன்னாகம். (6799)

## இன்று

யாழ் றோட்டறக்ட் கழகம் நடத்தும் பேராசிரியர் ஓதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பொது அறிவுப் போட்டித் தொடரில் யாழ்ப்பாணப் பிரிவுக்கான போட்டிகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (த)

## விளையாட்டு நிகழ்வு

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ் றோட்டரக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அரங்கில் ரெனிஸ் போட்டிகள் நடைபெறும்.

இன்றைய போட்டியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செட்றிக்பிரலா, திரு. புறாடி, திரு. ரமேஷ், திரு. ஆர். ராஜ்குமார் ஆகியோர் பங்குபற்றுவர்.

## வர்த்தமானி அறிவித்தலை பார்க்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 9

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் — பயிற்சிக்காகக் கற்கும் நிலைத் தாதிகளை— ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் பிரதி இங்கு கிடைத்துள்ளது. மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினம் பிற்போடப் பட்டிருப்பதாக யாழ் அரச அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரை விண்ணப்பிக்காதோர் தமது விண்ணப்பங்களை ஒரு வார காலத்தினுள் தம்மிடம் கையளிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் பிரதியை இலக்கம் 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். (உ-5-162)

## பழுதடைந்த மரை வற்றல்

குருநகர், பெப் 9

பழுதடைந்த மரை வற்றல் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கண்டுபிடித்துள்ளார்.

மரை வற்றல் வன்னிப்பகுதியில் இருந்து எடுத்துவரப்பட்டு குடாநாட்டில் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது,

இவற்றை உட்கொள்வதனால் குடல் சார்ந்த நோய்கள் உருவாகும் அபாயம் உண்டென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## இன்று மழை?

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களில் இன்று ஆங்காங்கே மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இன்று பிற்பகல் இடியுடன்கூடிய மழை பெய்யும். (உ-8)

சேவா--
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முதலாம் திகதி முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை செய்யப்படும் வரை அவரது மனைவி ஹேமா பிரேமதாஸா சேவா வனிதா இயக்கத் தலைவியாக இருந்து வந்தார்.

இப்போது சேவா வனிதா இயக்க நிர்வாகத்தை ஏற்றுள்ளவர்கள் வாகனங்கள் காணாமற்போன விஷயத்தை இரகசியப் பொலீஸாரின் விசாரணைக்கு விடுவது என்று தீர்மானித்துள்ளனர்.

## A/L 94
வர்த்தகம்
DAY CLASSES
நடைபெறுகின்றன,

ACC
MR. சௌந்தி
COM
MR பசில்
ECON.
MR E பிரபாகரன்

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி
(29338)

டெஸ்ட் கிரிக்கெட் சரித்திரத்தில்

# 432 விக்கெட்டுகளை வீழ்த்தி கபில் சாதனை

அஹமதபாத், பெப் 9

டெஸ்ட் போட்டிகளில் உலகிலேயே ஆகக் கூடுதலான விக்கட்டுகளை வீழ்த்தியவர் என்ற சாதனையை இந்தியக் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் நேற்று நிலைநாட்டினார்.

கடந்த மாதம் 30ஆம் திகதி பெங்களூரில் இலங்கை, இந்திய அணிகளுக்கு இடையே நடந்த டெஸ்ட் போட்டியில் — இதுவரைடெஸ்ட் போட்டிகளில்431விக்கெட்டுக்களை வீழ்த்தி, நியூசிலந்து கிரிக்கெட் வீரர் றிச்சர்ட் ஹாட்லி ஏற்கனவே ஏற்படுத்தியிருந்த உலக சாதனையை எட்டிப் பிடித்திருந்தார் கபில்தேவ்.

நேற்று இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையே அஹமதபாத்தில் ஆரம்பமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை வீரர் திலகரத்னாவின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் உலகிலேயே டெஸ்ட் போட்டிகளில் ஆகக் கூடுதலான — 432 விக்கெட்டுகளை- வீழ்த்தி, உலக சாதனையை கபில்தேவ் நிலை நாட்டினார்.

நேற்றைய முதலாம் நாள் ஆட்டத்தில் இலங்கை 119 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து சுருண்டது.

நேற்று ஆட்ட நேர முடிவின் போது இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

(உ-இ-த-எ)

உ
சிவமயம்

## முக்கிய அறிவித்தல்



துண்டி இந்து மயான பரிபாலன சபையின் (கொழும்புத்துறை) புதிய ஒழுங்கு விதிமுறைகள் பின்வருமாறு :-

மேற்குறிப்பிட்ட பரிபாலன சபையைத் தவிர இம் மயானத்திற்கான அபிவிருத்திச் செயல் திட்டங்களுக்காக எந்த ஒரு தனிநபரும் பணம் சேகரிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் 11 - 02 - 1994 வெள்ளிக்கிழமையில் இருந்து மயானத்திற்குள் பிரேதத் தகனத்திற்குக் கொண்டு செல்பவர்கள் குறைந்தது மூன்று மணித்தியாலத்திற்கு முன்னதாகச் சபையின் பொருளாளரிடம் அனுமதியைப் பெற்று மயானத்தில் உள்ள காவலாளியிடம் கொடுக்க வேண்டுமெனவும் சபையினரால் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை பொதுமக்கள் முக்கிய கவனத்திற்கு சபையின் சார்பாக பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி : வணக்கம்

ம. சுந்தரலிங்கம்
கௌரவ தலைவர்.

செ. கந்தசாமி
கௌரவ செயலாளர்.

க. கிருஷ்ணகுமார்
கௌரவ பொருளாளர்,
துண்டி, கொழும்புத்துறை.
09-02-1994 (சி/7303)

# மரண அறிவித்தல்கள்

## க.சி. குலரத்தினம்

பல்கலைப்புலவர் க.சி குலரத்தினம் அவர்கள் 6-2-94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சின்னையா பொன்னம்மா ஆகியோரின் புதல்வரும் காலஞ்சென்ற க.சி. கனகசபாபதி, க சி குலசேகரம், திருமதி. சி. பரிபூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், குமாரசாமி லிங்ககுமாரி, கிருஷ்ணானந்தன் சூரியகுமாரி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், சு. குமாரசாமி [முகாமையாளர், ஜவ்வஜி பிறதர்ஸ்- கொழும்பு] காலஞ்சென்ற க கிருஷ்ணானந்தன் [முன்னாள் உரிமையாளர், முருகன் ஸ்ரோர்ஸ் நல்லூர்] ஆகியோரின் மாமனாரும், நித்தியா, வித்தியா, வைஷ்ணவி, தர்ஷனி ஆகியோரது பாசமிகு பாட்டனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 10- 2- 94 வியாழக்கிழமை இல. 2, கந்தபுராண வீதியில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரிகைகளுக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
திருமதி சூரியகுமாரி
கிருஷ்ணானந்தன்
[மகள்]

2, கந்தபுராண வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம். [29343]

## செ. பாலசுப்பிரமணியம்

சரவணை கிழக்கை பிறப்பிடமாகவும் இல. 35, காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் வசித்தவருமாகிய செல்லையா பாலசுப்பிரமணியம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா, செல்லையா பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரபல வர்த்தகரான பாலேந்திரன், சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவி பவானியின் அன்பு மாமனாரும், பரமேஸ்வரி, வேலாயுதபிள்ளை, தியாகராஜா (சுவிஸ்), கோவிந்தராஜா, மற்றும் குலோகேஸ்வரி (யாழ். நிர்மாணத் திணைக்களம்) ஆகியோரின் சகோதரனும், குணராசாவின் (கொழும்பு) சகலனும், C V. BHATT நிறுவனத்தைச் சேர்ந்த இராஜேந்திரன், குழந்தைவேல் (யாழ். மாநகரசபை), வர்த்தகர் செல்லத்துரை (கொக்குவில்), கனகாம்பிகை (கொழும்பு), சரஸ்வதி (கனடா), ராசலட்சுமி, சரஸ்வதி, சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9 02-94) பிற்பகல் 2. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ''சிந்துபாத்து'' இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலேந்திரன்,
சிவச்சந்திரன்.
(மக்கள்)

No. 35, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
கண்டிக்குளி (29345)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 09-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org